

கலைஞர் 100 1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli


நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 105 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 08 – வெள்ளிக்கிழமை 24 நவம்பர் 2023 – சென்னை 28 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 105: Thiruvalluvar Year - 2054 - Karthigai 08 - Friday 24 November 2023 - Chennai 28 Pages ₹ 5.00


## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (3)

# சிங்கத்தின் குகையில் சிலந்தி கூடுகட்டுவதா?



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ‘இளைஞர்களுக்கு வழி விடுவோம்’ எனும் தலைப்பில் முரசொலி’யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 ‘கலைஞர் கடிதங்கள்’ எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.17 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

நெருக்கடி கால நெருப்பின் “ஜ்வாலை” அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் அனற் பிழம்பாய்க் கொதித்த போது, இப்போது குடும்பக் கட்சி என்று குதர்க்கம் பேசுகிற குள்ளநரிக் கும்பல், இந்தக் குடும்பம் இருக்கும் திசையின் பக்கம் கூடத் திரும்பிப் பார்த்தது கிடையாது. நெருக்கடி நிலையை எதிர்த்து தி.மு.கழகச் செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றியதைத் தொடர்ந்து, 1976இல் ஆட்சி கலைக்கப்பட்டது என்று அறிவிப்பு - அடுத்த நாள் காலை முதல் அதிகாரிகள் படையெடுப்பு - முன்னாள் அமைச்சர்கள் - நாடாளுமன்றக் கழக உறுப்பினர்கள், சட்டமன்றக் கழக உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் என்று ஆயிரம் பேர் கைது - எந்தச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள் என்ற தகவல் கூட தெரியாத நிலைமை - தம்பி மாறனையும், தம்பி ஸ்டாலினையும் வீட்டுக்குள் நுழைந்து போலீஸ் அதிகாரிகள் கைது செய்ததுதான் தெரியும். அவர்களை எந்த ஊர் சிறைக்குக் கொண்டு சென்றார்கள் - எங்கே அடைத்துள்ளார்கள் என்று தெரியாது - இருபது நாட்களுக்குப் பிறகுதான் அவர்கள் சென்னை சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும் - சென்னை சிறையில் அடைபட்டுள்ள கழகக் கண்மணிகள் அனைவரையும் சிறைக் கூண்டுகளுக்குள்ளேயே காவலர்கள் கடுமையாக அடித்து உதைத்துச் சித்ரவதை செய்தார்கள் என்பதும் காட்டுத் தீ போல் மூலை முடுக்குகள் எல்லாம் செய்தியாகப் பரவியது.

சென்னைச் சிறையில் இருந்தவர்களை - சிறையில் நேர்காணலுக்கே, எனக்கும், என் குடும்பத்தாருக்கும் நாற்பது நாட்களுக்குப் பிறகே அனுமதி கிடைத்தது - அதுவும் சிறை வாசலில் உ ண் ணா வி ர த ப் போராட்டம் நடத்தப் போகிறோம் என்று அறிவித்த பிறகே - அந்த அனுமதியும் வழங்கப்பட்டது. இந்தக் கொடுமை ஓராண்டு நீடித்தது. அந்த ஓராண்டு காலமும் அது வரையில் நெருங்கிப் பழகிய நண்பர்கள், கழகத்தின் சார்பில் பெரும்பதவிகளை அனுபவித்தவர்கள், “அற்ற குளத்து அறுநீர்ப் பறவைகள், மனித உருப்பெற்று வந்தால் எப்படிக் காட்சியளிப்பர்” என்பதை, எனக்கும், இந்த இயக்கத்திற்கும் அனுபவ ரீதியாக உணர்த்தி விட்டனர் என்றே சொல்லலாம்.

**கலைஞர் கடிதம்**

அவர்களில் சிலர், நெருக்கடி காலம் நீங்கி, “ஜனநாயக” மறுமலர்ச்சி ஏற்பட்டபோது, கழகத்தையும், என்னையும் நாடித் திரும்பியதை மறந்துவிட முடியாது. அவர்கள் யார் என்பதை அவர்களே அறிவார்கள் என்பதால் இப்போது அதை நான் நினைவூட்ட விரும்பவில்லை.

ஒரு நிகழ்ச்சி - உனக்குச் சொல்லியாக வேண்டும். உயிருக்குயிராக என்னுடன் பழகிய தோழர் - அவரும், அவருடன் நான்கைந்து பேரும் - நெருக்கடி காலம் முழுதும் என்னிடமிருந்து விலகி வெகுதூரம் சென்றிருந்தவர்கள் - சிரித்த முகத்துடன் என்னைச் சந்திக்க வந்தார்கள் - வாசலில் அடியெடுத்து வைத்ததுதான் தாமதம் - “அட, துரோகிகளா! இப்பத்தான் இந்த வீடு அடையாளம் தெரிந்ததா? - எல்லோரும் செத்து விட்டோம் என்று இதுவரை நினைத்து வராமல் இருந்தவர்கள், இப்ப மட்டும் எங்கே வந்தீங்க?”

என்று உரத்த குரல் ஒன்று கேட்டு, வெளியே ஓடிப் போய்ப் பார்த்தால் என் மகன் மு.க. அழகிரியின் குரல்தான் அது!

“என்னப்பா அழகிரி! ஏன் அவுங்களை விரட்டுரே?”

“அப்பா - எமர்ஜன்சின்னு எங்கேயோ ஓடிட்டு - இப்ப வந்திருக்காங்க - இவுங்களை நான் உள்ளே விடமாட்டேன்”

தம்பி அழகிரி, இனிய இயல்புடன் கழகத்தினரிடம் அன்புடன் பழகுவதையும் கண்டிருக்கிறேன் - பாராட்டி மகிழ்ந்திருக்கிறேன் - நன்றிக்குப் பொருள் தெரியாதவர்கள், கழகத்தை வெறும் பதவி பிடிக்கும் கருவியாக மட்டும் கருதுகிறவர்கள் மீது, கடுமையான வெறுப்பு உமிழ்வதையும் கண்டுணர்ந்திருக்கிறேன் - அளவோடு இருந்தால் இரண்டு சுபாவங்களுமே இளைஞர்களுக்கு இன்றியமையாத் தேவைகள்தான்.

உடன்பிறப்பே, என்னுடைய பிள்ளைகள், பெண்கள் இன்று கழக ஆர்வலர்களாக இருப்பதால், வயிறெரிந்து வசை பாடுகிறார்களே! வார ஏடுகள், நாளேடுகளில் கூட “வாரிசு” - “குடும்பம்” என்றெல்லாம் விஷத்தைக் கக்கிய வண்ணம் இருக்கிறார்களே! அவர்கள் நான், நேற்று எழுதிய இளம் வயது லெனின் பற்றிய கட்டுரை தீட்டிட நான் படித்த லெனின் வரலாற்றைப் படித்தால் அறிந்து கொள்ளக் கூடும்; “வில்தீமிர் உலியானவ் எனப்படும் லெனின் மற்றும் ஆன்னா, அலெக்ஸாந்தர், ஓல்கா, திமீத்ரிய், மரீயா எனும் ஆறு பேர் சகோதரர்கள்! அந்த நூலாசிரியர் கூறுகிறார்! மொத்தம் அந்த ஆறு பிள்ளைகளும் புரட்சிக்காரர்களாக விளங்கியது தற்செயல் அல்ல” என்பதாக! அந்தக் குடும்பத்துப் பிள்ளைகள் எல்லோருமே இயல்பாகவே புரட்சிக் கருத்துக் கொண்டவர்களாக விளங்கியதால் பெருமையடைந்தனர் பெற்றோர் - ஆனால், இன்னமும் இங்கேதான் வாரிசு, குடும்பம் என்று வயிறு எரிந்து வக்கணை பேசிக் கொண்டிருக்கின்றனர். என் குடும்பத்துப் பிள்ளைகள் ஆறு பேரும் இயக்க ஆர்வம் படைத்தவர்கள் - இலட்சியம் காப்பவர்கள் - தொண்டர்க்குத் துணை நிற்பவர்கள்.

என் குடும்பத்திலாகட்டும், இயக்க முன்னோடிகள் வீட்டுப் பிள்ளைகளாகட்டும், தந்தை வழியில் தன்மானம் போற்றித் தமிழகம் காத்திடும் ஆக்கப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது எவ்வாறு தவறாகும்? அவர்கள் போற்றுதலுக்குத் தகுதி படைத்தவர்களன்றோ?

நான், 1957ஆம் ஆண்டு, குளித்தலையில் போட்டி யிட்டபோது, முதலில் என்னை வரவேற்று வாழ்த்தியவர், அந்த ஊர்ப் பெரியவர்களில் ஒருவரான வையாபுரிச் சோழகர் - அவர் பழுத்த காங்கிரஸ்காரர் - அவர் மூத்த மகன் திராவிடர் கழகம் - அவருக்கு அடுத்த மகன் தி.மு.கழகம் - அவர்களுடைய பிள்ளைகுட்டிகள், பேரன், பேத்திகள் மொத்தம் குடும்பத்தினர் பதினைந்து பேர் இருக்கும். ஆளுக்கொரு கட்சி! அப்படியும் ஒரு குடும்பம் - எல்லாப் பிள்ளைகட்கும் திராவிட முன்னேற்றக் கழகப் பற்று என்பதாக இப்படியும் ஒரு குடும்பம்.

இதிலும் என் குடும்பத்து பிள்ளை - என் பிள்ளை என்பதால் ஸ்டாலினுக்குச் சிறப்பா? அவர் அல்லும் பகலும், ஓடியாடி, அலைந்து திரிந்து, இயக்கப் பணியை ஓய்வின்றி ஆற்றுவதால்தானே உடன்பிறப்புக்களாம் உன் போன்றோர் இதயத்தில் இடம் பெற்றுள்ளார் - நெருக்கடி கால நெருப்பாற்றைக்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## சட்டமன்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியாது!

# “ஆளுநருக்கு தனியாக எந்த அதிகாரமும் இல்லை”!

## பஞ்சாப் அரசு தொடுத்த வழக்கில் உச்சநீதிமன்றம் தீர்ப்பு!

புதுடெல்லி, நவ.24–


**மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கே முழு அதிகாரம் உள்ளது என்றும், ஒரு அடையாளப் பதவியான ஆளுநருக்கு தனியாக எந்த அதிகாரம் இல்லை என்றும், அரசும் அமைச்சர்களும் சொல்லுகின்ற படிதான் ஆளுநர் செயல்பட முடியும் என்று உச்சநீதிமன்றம் பரபரப்புத் தீர்ப்பை வெளியிட்டுள்ளது.**

**மசோதா மீதான ஒப்புதலை நிறுத்திவைக்க முடிவு செய்தால், அந்த மசோதாவை மறுபரிசீலனைக்காக ஆளுநர் சட்டப் பேரவைக்குத்தான் திருப்பி அனுப்ப வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் பஞ்சாப் வழக்கின் தீர்ப்பில் தீர்ப்பில் கூறியுள்ளது.**

பஞ்சாப் ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அம்மாநில சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் தராமல் நிறுத்திவைத்ததை எதிர்த்து அம்மாநில அரசு தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. அதன் எழுத்துப்பூர்வமான தீர்ப்பை நேற்று இணையத்தில் பதிவிட்டுள்ளது.

அரசியலமைப்பின் 200–வது பிரிவு படி மசோதா மீதான ஒப்புதலை ஆளுநர் நிறுத்திவைக்க முடிவு செய்தால், அதற்கு அடுத்தகட்ட நடவடிக்கைக்காக சட்டப்பேரவையின் மறுபரிசீலனைக்காக மாநில சட்டமன்றத்திற்கு மசோதாவை அனுப்ப வேண்டும். அப்படிச் செயல்படுவதே சரியான நடவடிக்கையாகும் என்றும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

அப்படி ஆளுநர் செயல்படவில்லை என்றால், சட்டமன்ற நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடும் செயல் ஆகிவிடும். ஆளுநரால் சட்டமியற்றும் சட்டமன்றத்தின் அரசியல் சாசன நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியாது என்றும், ஜனநாயக நடைமுறையில் உண்மையான அதிகாரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடமே உள்ளது; குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படும்



ஆளுநர், மாநிலத்தின் தலைமை பதவி வகிப்பவர் மட்டுமே ஆவார் என்றும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

### மசோதாக்களை தடுக்க முடியாது!

மாநில ஆளுநர் என்பவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர் கிடையாது. ஆனாலும் அவருக்கென்று அரசியல் சட்ட அதிகாரங்கள் உள்ளன. ஆனாலும் அந்த அதிகாரங்களைக் கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில சட்டமன்றங்களால் நிறைவேற்றப்படும் மசோதாக்களை தடுத்து நிறுத்த முடியாது.

ஆளுநர்களின் அதிகாரங்கள் தொடர்பாக 200–வது சட்டப்பிரிவு தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் தர வேண்டும் அல்லது சந்தேகம் இருப்பின் விளக்கம் கேட்டு சட்டப்பேரவைக்கே திருப்பி அனுப்ப வேண்டும் அல்லது குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதை விடுத்து ஆளுநருக்கு என்று தனியாக எந்த அதிகாரமும் இல்லை. ஆளுநர் பதவி என்பது ஒரு அடையாளப் பதவிதானே தவிர, மாநில சட்டமன்றங்கள் நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களை அவர் நிறுத்திவைக்க முடியாது என்றும் உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

### அரசியல் சட்ட அடிப்படைக்கு முரணானது!

நாடாளுமன்ற ஜனநாயக முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கொண்ட சட்டமன்றங்களுக்கே முழு அதிகாரங்கள் உள்ளன. ஆளுநர் என்பவர் அமைச்சரவையின் ஆலோசனைப்படி தான் செயல்பட வேண்டும். அப்படி இருக்கும்போது, எந்தவொரு காரணமுமின்றி, எந்தவொரு மசோதாக்களையும் கிடப்பில் வைத்திருக்க ஆளுநருக்கு அதிகாரமில்லை.

அவ்வாறு நாள் கணக்கில் மசோதாக்களை தம்மிடம் நடவடிக்கை எதையும் எடுக்காமல் கிடப்பில் வைத்துக்கொண்டிருப்பது அரசியல் சட்ட அடிப்படை கொள்கைகளுக்கே முரணானது என்றும் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.